# சட்டப்பேரவையில் அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் பதிலுரை... 11ஆம் பக்கத் தொடர்ச்சி

இதுவும் கடந்த ஆட்சியை விட இரண்டு மடங்கான எண்ணிக்கையில் பயனாளிகளுக்கும், இரண்டு மடங்கு எண்ணிக்கையில் கடன் தொகையும் வழங்கி சாதனை படைக்கப்பட்டுள்ளது. இந்தியாவிலேயே மாற்றுத் திறனாளிகளுக்கு அதிக எண்ணிக்கையிலும், அதிக தொகையிலும் கடன் வழங்கும் கூட்டுறவுச் சங்கங்களின் பட்டியலில் தமிழ்நாடு முதல் மாநிலமாக தொடர்ந்து திகழ்ந்து வருகிறது. பயிர்க் கடன், கால்நடை வளர்ப்புக் கடன் மற்றும் மாற்றுத் திறனாளிகளுக்கான கடன் ஆகிய மூன்று நேர்வுகளிலும் தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் நிர்ணயிக்கப்பட்ட இலக்கை தாண்டி சாதனை படைக்கப்பட்டுள்ளது.

**ஊ) சிறு வணிகக் கடன்**

பூ, காய்கறிகள், பழங்கள் வியாபாரம் செய்தல், பெட்டிக் கடை வியாபாரம், தள்ளுவண்டியில் பழங்கள், காய்கறிகள் விற்பவர்கள் போன்ற சிறு வணிகங்கள் செய்பவர்கள் தனியாரிடம் அதிக வட்டியில் கடன் பெறுவதை தடுத்து கூட்டுறவுகள் மூலம் குறைந்த வட்டியில் கடன் பெற்று பயன் பெறும் வகையில் கூட்டுறவு வங்கிகளில் சிறுவணிகக் கடன் வழங்கப்படுகிறது. 2023-2024 ஆம் ஆண்டில் 97,498 நபர்களுக்கு ரூ.361/- கோடி சிறுவணிகக் கடன் வழங்கப்பட்டுள்ளது.

**எ) நகைக் கடன்**

பல்வேறு கூட்டுறவு வங்கிகள் மற்றும் கூட்டுறவு நிறுவனங்கள் மூலம் நடுத்தர மற்றும் ஏழை, எளிய மக்களின் அவசரத் தேவைக்காக அவர்களிடம் உள்ள தங்க நகைகளுக்கு ஈடாக நகைக் கடன் வழங்கப்பட்டு வருகிறது. 2023-2024 ஆம் நிதியாண்டில் 62 இலட்சத்து 65 ஆயிரத்து 82 நபர்களுக்கு ரூ.46,835/- கோடி கடன் வழங்கப்பட்டுள்ளது.

**நகைக் கடன் தள்ளுபடி**

முதல்வர் அவர்களின் தேர்தல் வாக்குறுதியினை நிறைவேற்றும் வகையில் ஐந்து பவுனுக்குட்பட்ட பொது நகைக் கடன் பெற்ற 31.3.2021 வரை நிலுவையில் இருந்த ரூ.5,013/- கோடியில் தள்ளுபடி செய்து, தள்ளுபடி சான்றிதழ்களுடன், அவர்களது நகைகளும் திருப்பி வழங்கப்பட்டுள்ளன. இதன் மூலம் 13,12,717 குடும்பங்கள் பயன் அடைந்துள்ளனர்.

**கல்விக் கடன்.**

இளைஞர்கள் வாழ்வில் முன்னேற்றம் அடைவதற்கு, கல்வி மிகவும் அவசியமாகும். அவ்வாறு கல்லூரிக் கல்வி பயிலும் மாணவர்களுக்கு குடும்ப வருமானம் ஒரு தடையாக இருக்க கூடாது எனக் கருதி, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவுபடி, கூட்டுறவு நிறுவனங்களின் மூலம் மாணவர்களின் புத்தக கட்டணம், தங்கும் விடுதிக் கட்டணம், உணவுக் கட்டணம், டியூஷன் கட்டணம் போன்று பல்வேறு கல்வி கட்டணங்களை செலுத்த ஏதுவாக ரூ. 1 லட்சமாக வழங்கப்பட்டு வந்த கல்விக்கடனை சமீபத்தில் ரூ.5 இலட்சமாக உயர்த்தி நம்முடைய முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள். கல்விக்கடன் பெறும் மாணவர்கள் கல்வி பயிலும் காலம் முடிந்து அதை 6 மாதங்கள் கழித்து வரும் 5 வருடங்களுக்குள் கடனை திருப்பி செலுத்த வேண்டுமென்று அறிவிக்கப்பட்டு, இதற்காக அதிகபட்ச வட்டி விகிதம் என்று 10% நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது.

**கூட்டுறவு சங்க தேர்தல்.**

அதைப்பற்றியும் இங்கே உறுப்பினர்கள் பேசினார்கள். கடந்த காலங்களில் இருந்த பத்தாண்டுகால ஆட்சியாளர்கள் தேர்தல்களை முறையாக நடத்தவில்லை. குறிப்பாக, உறுப்பினர்களின் சேர்க்கையும், தேர்தலும் முறையாக நடத்தப்படவில்லை. கடந்த ஆட்சிக்காலத்தில் சேர்க்கப்பட்டு, தற்போது வரை உள்ள அவர்கள் ஒப்படைத்த போது, அதாவது ஆட்சி மாற்றத்தின் போது இருந்த வாக்காளர்களின் எண்ணிக்கை, 1 கோடியே 90 இலட்சத்து 26 ஆயிரத்து 152 உறுப்பினர்கள். அவர்கள் கொடுத்த கணக்கு 1,90,26,152 உறுப்பினர்கள். அதில், 63 இலட்சத்து 22 ஆயிரத்து 288 உறுப்பினர்கள் இது வரை தகுதியற்றவர்களாக கண்டறியப்பட்டிருக்கிறார்கள். அப்படி என்றால் என்ன, உயிர்நீத்த உறுப்பினர்கள் அதில் இருக்கிறார்கள். போலியான உறுப்பினர்கள் இருக்கிறார்கள். ஆக இப்படிப்பட்ட அந்த வாக்காளர் பட்டியலை வைத்து, தேர்தலை நடத்துவது முறையாக இருக்காது என்று முதலமைச்சர் அவர்கள் சொல்லி, தற்போது தேர்தல் ஆணையம் புதிய விதிமுறைகள் வகுக்கப்பட்டு, அந்த 63 இலட்சத்து 22 ஆயிரத்து 288 உறுப்பினர்கள் தகுதியற்றவர்களாக கண்டறியப்பட்டு நீக்கியாகிவிட்டது.

தற்போது தேர்தல் ஆணையம் புதிய விதிமுறைகள் வகுத்து, அதன் அடிப்படையில் அத்துடன் ஆதார், ரேசன் அட்டை இணைக்கும் பணி நடைபெற்று வருகிறது. இதிலும் பார்த்தீர்களென்றால் 59 சதவிகிதம் அந்த ஆதார், ரேசன் அட்டை இணைப்புப்பணி நிறைவு பெற்றுள்ளது. இன்னும் 41 சதவிகிதம் இணைக்கும் பணி முடியவில்லை. ஆகவே, அந்தப் பணியும் நடக்க வேண்டும். இதெல்லாம் முடிந்த பிறகு, குறிப்பிட்ட நேரத்தில் தேர்தலை நடத்துவதில் முதலமைச்சர் அவர்கள் உறுதியாக இருக்கிறார்கள்.

கடந்த காலங்களில், பல காலக்கட்டங்களில் நடத்தப்படாமல் இருந்த உள்ளாட்சி அமைப்புகளுக்கான தேர்தலை கடந்த ஆட்சியாளர்கள் காலங்கடத்திக் கொண்டே இருந்தார்கள். அப்பொழுது கூட நீதிமன்றத்திற்கு அன்றைக்கு எதிர்க்கட்சியாக இருந்த நிலையில் நம் தலைவர் அவர்கள் சென்று போராடி, பிறகு அந்த உள்ளாட்சி அமைப்புகளுக்கான தேர்தலை நடத்தச் சொன்னவர் தான். ஆட்சிமாற்றம் வந்தது. வந்தவுடன் அனைத்து தேர்தல்களையும் நடத்தி ஜனநாயகத்தை நிலைநிறுத்திய தலைவர் நம்முடைய முதலமைச்சர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

ஆகவே, தேர்தல் நடத்த வேண்டும் என்பது நோக்கம். ஆனால் அந்த தேர்தல் முறையாகவும், நியாயமானதாகவும் இருக்க வேண்டும் என்ற அடிப்படையிலேதான் இந்த பணிகள் இப்போது நடைபெற்றுக் கொண்டுவருகிறது. தமிழ்நாட்டில் கூட்டுறவுத் துறை முழு உத்வேகத்துடனும், எழுச்சியுடனும் பணியாற்றி, ஏழையெளிய மற்ற விவசாயப் பெருங்குடி மக்களுக்கு அவர்களின் பொருளாதார மேம்பாட்டிற்காக மிகப்பெரும் பங்களிப்பை ஆற்றி வருகிறது. இந்தப் பங்களிப்பு என்றென்றும் தொடரும் என்றும் மக்களுக்கான ஆட்சியாக மக்களுடன் ஒன்று இணைந்து மாபெரும் சாதனைகளை முதலமைச்சர் இன்னும் செய்து காட்ட போகிறார் என்பதில் எந்தவிதமான சந்தேகம் இல்லை. அது காலத்தின் கட்டாயம்.

தெற்கு தேய்கிறது என்பதெல்லாம் மாறி இன்று தமிழ்நாட்டை எடுத்துக் காட்டாக பல்வேறு நாடுகளில் சாதனைப் பட்டியல், மாநிலங்களில் அல்ல. பல்வேறு நாடுகளில் சாதனை பட்டியல் வெளியிடுவதை நம்மால் காண முடிகிறது. காரணம் சமரசம் இல்லாத கொள்கை பிடிப்பும், சுயநலம் இல்லாத சமூக சேவையும்தான் நம்மை ஆரோக்கியமாக மக்களிடம் பணியாற்ற வைக்கிறது. ஆனால், தப்பித் தவறி கூட தமிழ்நாட்டிற்கு நன்மை செய்து விடக்கூடாது என்று எண்ணுபவர்களை எதிரே நிற்க வைத்து யாரும் எதிர்பார்க்காத ஏற்ற மிகு திட்டங்களை தமிழ்நாட்டில் செயல்படுத்தி, சொல்லால் அல்ல செயலால் அடித்து பாடம் எடுக்கிறார் நம் முதலமைச்சர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) துறைகளில் நடந்தேறும் தரம் வாய்ந்த திட்டங்களும், தடம் பதித்த சாதனைகளும், அடுத்த தலைமுறையினருக்கு கொள்கையின் உணர்வை போதிக்கட்டும் எனக் கூறி கூட்டுறவுத்துறை தொடர்பான புதிய அறிவிப்புகளை வெளியிடுகிறேன். அவை எல்லாவற்றையும் படித்ததாக கருதி பதிவு செய்துவிடலாம்.

**அறிவிப்புகள்**

**1. தமிழ்நாட்டில் அனைவருக்குமான பொருளாதார வளர்ச்சிக்கு ஏதுவாக, கூட்டுறவு அமைப்புகள்மூலம் ரூ.1 இலட்சம் கோடி கடன் உதவி வழங்கப்படும்.**

தமிழ்நாட்டில் நூறாண்டுகளுக்கும் மேலாக அனைத்துத் தரப்பு மக்களின் பொருளாதார மேம்பாட்டிற்காக பல்வேறு முன்னெடுப்புகளை கூட்டுறவு நிறுவனங்கள் மேற்கொண்டு அவர்களின் நலனில் அக்கறையுடன் செயல்பட்டு வருகின்றன .

விவசாயிகள், ஏழை எளிய நடுத்தர மக்கள், சுய உதவிக் குழுக்கள், மாற்றுத்திறனாளிகள் போன்ற அனைத்து தரப்பினரின் பொருளாதார தேவைகளைப் பூர்த்தி செய்திடும் வகையில் மாநிலத்தில் உள்ள அனைத்து வகை கூட்டுறவுச் சங்கங்கள்மூலம் ரூபாய் ஒரு இலட்சம் கோடி கடன்கள் நடப்பு நிதியாண்டில் வழங்கப்படும்.

இதன்மூலம் மாநிலம் முழுவதும் சீரான பொருளாதார வளர்ச்சி ஏற்பட வழிவகை செய்யப்படும்.

இந்த இலக்கை தற்போது நிர்ணயித்திருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி)

**2. தானியங்களை பாதுகாப்பாக சேமிக்கவும், நல்ல விலை பெறுவதற்கு ஏதுவாகவும், கூட்டுறவு அமைப்புகள்மூலம் தானிய சேமிப்பு கட்டமைப்புகள் மேம்படுத்தப்படும்.**

விவசாயிகள் விளைவித்திடும் விளைபொருட்களின் விலை சரிவு ஏற்படும் சமயங்களில் அவற்றை சேமித்து நல்ல விலை கிடைக்கும் சமயங்களில் நியாயமான விலையில் விற்பனை செய்ய ஏதுவாகவும், உணவு தானியங்களை பாதுகாப்பாக சேமித்து வைக்கவும், விளைபொருட்கள் மீது உடனடி ஈட்டுக்கடன் வசதி பெறவும் விவசாயிகளின் நலனுக்காக கூட்டுறவுச் சங்கங்கள்மூலம் 25,000 மெட்ரிக் டன் கொள்ளளவுடன் நவீன தானிய சேமிப்பு கிடங்குகள் கூட்டுறவு அமைப்புகள்மூலம் கட்டப்படும்.

**3. கூட்டுறவுச் சங்கங்களின் பணியாளர்களின் குறைகளை தீர்வு செய்திடும் வகையில் இருமாதங்களுக்கு ஒருமுறை மண்டல அளவில் “பணியாளர் நாள்“ நிகழ்வு நடத்தப்படும்.**

கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரின் கட்டுப்பாட்டில் 7,655 கூட்டுறவுச் சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன. இச்சங்கங்களில் சுமார் 48,000 பணியாளர்கள் (பொதுவிநியோகத்திட்ட பணியாளர்கள் உட்பட) பணிபுரிந்து வருகிறார்கள். இவர்களுக்கு பணி தொடர்பாகவும், பணியின் போதும் அல்லது வேறு வகையிலும் ஏற்படும் குறைகளை விதிகளுக்குட்பட்டு தீர்வு செய்திடும் வகையில் இருமாதங்களுக்கு ஒருமுறை மண்டல அளவில் “பணியாளர் நாள்“ நிகழ்வு நடத்தப்படும்.

இந்நிகழ்வு, சங்கப் பணியாளர்கள், துறை அலுவலர்கள் மற்றும் நிர்வாகத்திற்கு இடையே இணக்கமான சூழலை உருவாக்கி பணியாளர்களுடைய பணித்திறனை மேம்படுத்தி உறுப்பினர்களுக்கு சிறந்த சேவை வழங்க வழிவகுக்கும்.

**4. உணவுப் பொருட்களின் தரத்தை பாதுகாக்க ஏதுவாக TANFED நிறுவனத்தின் குளிர்பதன கிடங்குகள் நவீனமயமாக்கப்படும்.**

TANFED நிறுவனத்தால் பராமரிக்கப்பட்டு வரும் குளிர்பதனக் கிடங்குகளின் உட்கட்டமைப்புகள் சீரமைக்கப்பட்டு உட்பிரிவுகள் (Internal Partition) அமைத்து பல்வேறு உணவுப் பொருட்கள் சேமிக்கவும், மின்நுகர்வினைக் குறைக்கும் வகையில் நவீன வசதிகள், கன்வேயர் (Conveyor Belt) அமைப்பு ஏற்படுத்தி அதன் செயல்திறன் மேம்படுத்தப்படும்.

மேலும், 36,140 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட 45 உலர் கிடங்குகளின் உட்கட்டமைப்புகள் சீரமைக்கப்பட்டு அதன் செயல்திறன் மேம்படுத்தப்படும்.

இதன்மூலம் கிடங்குகளின் முழுப்பயன்பாடு உறுதி செய்யப்பட்டு, சங்கத்திற்கு கூடுதல் வருவாய் ஈட்ட வழிவகை செய்யப்படும்.

**5. கூட்டுறவுச் சங்கப் பணியாளர்களுக்கு அவர்களின் பணித்திறனை மேம்படுத்திட அவர்களின் பணிசார்ந்த புத்தாக்கப் பயிற்சி மற்றும் ஆளுமைத் திறன் பயிற்சி அளிக்கப்படும்.**

கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரின் கட்டுப்பாட்டில் செயல்படும் கூட்டுறவு கடன் சங்கங்கள், கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள், கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலைகள் மற்றும் கூட்டுறவு சிறப்பு சங்கங்கள் ஆகியவற்றில் பணிபுரியும் அனைத்து விதமான பணியாளர்களுக்கும் அவர்களின் பணி சார்ந்த புத்தாக்கப் பயிற்சிகள் மற்றும் ஆளுமைத்திறன் மேம்பாட்டு பயிற்சிகள் வழங்கப்படும். இதன்மூலம் சுமார் 48,000 பணியாளர்களின் பணித்திறன் மேம்பட்டு சங்கங்களின் செயல்பாடுகள் சிறக்கும்.

**6. விவசாயிகள் மற்றும் நுகர்வோர் பயன்பெறும் வகையில் பெருநகரங்களில் காய்கனி அங்காடிகள் அமைக்கப்படுவதுடன் இதற்கென முக்கிய மாவட்டங்களை இணைத்து காய்கனி வழித்தடங்கள் உருவாக்கப்படும்.**

நுகர்வோருக்குத் தரமான காய்கனிகள் நியாயமான விலையில் கிடைப்பதற்கு ஏதுவாக தமிழ்நாட்டில் முக்கிய பெருநகரங்களில் காய்கனி அங்காடிகள் அமைக்கப்படும். காய்கனி விளையும் ஊட்டி, திண்டுக்கல் மற்றும் கிருஷ்ணகிரி போன்ற பகுதிகளிலிருந்து கொள்முதல் செய்து அங்காடிகளுக்கு கொண்டு சேர்த்திட சிறப்பு காய்கனி வழித்தடங்கள் உருவாக்கப்படும். இதன்மூலம் விவசாயிகளுக்கு உரிய விலைகிடைக்கவும், நுகர்வோர்களுக்கு நியாயமான விலையில் காய்கனிகள் கிடைக்க வழிவகை ஏற்படும்.

**7. அனைத்து கூட்டுறவு விற்பனைச் சங்கங்களும் வேளாண் விளைபொருள் பதனிடும் சங்கங்களாக மேம்படுத்தப்படும்.**

அனைத்து கூட்டுறவு விற்பனைச் சங்கங்களும் அந்தந்த பகுதிகளில் விளைவிக்கப்படும் வேளாண் விளை பொருள்களை விவசாயிகளிடமிருந்து நேரடியாக கொள்முதல் செய்து அப்பொருட்களின் மதிப்பு கூட்டப்பட்டு (Value Addition) நுகர்வோருக்கு விற்பனை செய்யும் வகையில் பதனிடும் சங்கங்களாக மேம்படுத்தப்படும்.

மேலும், விற்பனைச் சங்கங்களின் வருவாயை உயர்த்திட அனைத்து விற்பனைச் சங்கங்களிலும் நகைக்கடன் வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**8. பெருகிவரும் நுகர்வு கலாச்சார தேவைக்கேற்ப கூட்டுறவு சிறப்பங்காடிகள் நவீனப்படுத்தப்படும்.**

நுகர்வோருக்கு தரமான நுகர்பொருட்கள் நியாயமான விலையில் கிடைப்பதற்கும், அனைத்து விதமான நுகர்வோர்களை கவரும் வகையிலும், கூட்டுறவு பண்டகசாலைகளின் பணிகள் சீரமைக்கப்பட்டு கூட்டுறவு சிறப்பங்காடிகளின் உட்கட்டமைப்புகள் நவீனமயமாக்கப்படும்.

இதன்மூலம் விற்பனை அதிகரிப்பதுடன் சந்தை விலையைக் கட்டுப்படுத்த தேவையான நடவடிக்கை மேற்கொள்ள வாய்ப்பு ஏற்படும்.

**9. நுகர்வோர் நலன் கருதி கூட்டுறவுச் சங்கங்களில் மின்னணு பணப்பரிவர்த்தனை சேவை விரிவுபடுத்தப்படும்.**

நுகர்வோருக்கு நவீன சேவைகளை எளிதாக வழங்கிடும் வகையில், அனைத்து சங்கங்களிலும் மின்னணு பணப்பரிவர்த்தனை சேவைகள் விரிவாக்கப்படும். கூட்டுறவு வங்கிகள் இச்சேவையில் முழுமையாக ஈடுபடுத்த இது உதவும்.

இச்சேவை நுகர்பொருள் விற்பனையை அதிகரிக்க உதவுவதுடன் இளைய சமூகத்தை கூட்டுறவுச் சங்கங்களை நோக்கி ஈர்க்கவும் உதவும்.

**10. பொது விநியோகத் திட்ட நியாயவிலைக் கடைகளுக்கு நுகர்பொருட்களை விநியோகம் செய்வதற்கு புவியிடங்காட்டியுடன் (GPS) கூடிய இவழித்தடம் (eWay) ஏற்படுத்தப்படும்.**

நியாயவிலைக் கடைகளுக்கு விரைவாகவும், உரிய நேரத்திலும், சரியான அளவிலும் பொருட்களை கிடங்குகளிலிருந்து கொண்டு சேர்ப்பதை உறுதி செய்து மேலாண்மை செய்வதற்காக புவியிடங்காட்டியுடன் (GPS) கூடிய இவழித்தடம் (eWay) ஏற்படுத்தப்படும்.

இதன்மூலம் வெளிப்படைத்தன்மை அதிகரித்து பயண நேரம் குறைந்து போக்குவரத்து செலவினம் குறைய வாய்ப்பு ஏற்படும்.

**11. தமிழ்நாட்டில் கூட்டுறவு தொடர்பான பணிகளை மேம்படுத்தும் வகையில் தேசிய அளவிலான கூட்டுறவு கருத்தரங்கம் (National Cooperative Conference) நடத்தப்படும்.**

தமிழ்நாட்டிலுள்ள கூட்டுறவுச் சங்கங்களின் வளர்ச்சிக்காகவும் மற்றும் பணியாளர்களின் செயல்திறனை மேம்படுத்தவும், சிறப்பான செயல்பாடுகளை (Best Practices) காட்சிப்படுத்தவும், பிற மாநிலங்கள் மற்றும் தேசிய நிறுவனங்களுடன் பகிர்ந்து கொள்ளும் வகையிலும் தேசிய அளவிலான கூட்டுறவு கருத்தரங்கம் (National Cooperative Conference) நடத்தப்படும்.

இக்கருத்தரங்கம் கூட்டுறவு அமைப்புக்களின் அடுத்தகட்ட வளர்ச்சிக்கு வித்திடும்.

**12. அனைத்து கூட்டுறவு அலுவலகங்கள் மற்றும் சங்கங்களின் பணிகள் கணினிமயமாக்கப்படும்.**

கூட்டுறவுத் துறையில் பதிவாளர் அலுவலகம், மண்டல மற்றும் சரக அலுவலகங்களின் மின்-அலுவலகமாக [eoffice] 28.03.2024 முதல் வெற்றிகரமாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதனைத் தொடர்ந்து மாநில அளவிலான அனைத்து கூட்டுறவு நிறுவனங்களிலும் மின்அலுவலகத் திட்டம் செயல்படுத்தப்படும்.

மேலும், வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகள் கணினிமயமாக்கல் நடவடிக்கையும், பதிவாளர் அலுவலக கணினிமயமாக்கல் நடவடிக்கையும் மேற்கொள்ளப்படும்.

எஞ்சிய அறிவிப்புகளை நான் படித்ததாகக் கருதி, அவைக் குறிப்பில் பதிவு செய்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன். ஏனெனில், அனைவரும் சொல்கிற அளவிற்கு நான் நடந்துகொள்ளக்கூடாது. (மேசையைத் தட்டும் ஒலி)

**13. கூட்டுறவுச் சங்கங்கள்/வங்கிகள் மூலம் இணையவழி (Online) கடன் வழங்கும் வசதி ஏற்படுத்தப்படும்.**

கூட்டுறவு அமைப்புகளில் அங்கத்தினர்களாக உள்ள விவசாய பெருங்குடி மக்கள், சிறு வியாபாரிகள், சுய உதவிக் குழு உறுப்பினர்கள், மாற்றுத்திறனாளிகள், சிறுபான்மையின உறுப்பினர்கள் மற்றும் நகைக்கடன் பெறும் இணை உறுப்பினர்கள் விரைவாகவும், எளிதாகவும் கடன் பெற்றிட இணைய வழி கடன் வழங்கும் வசதி செயல்படுத்தப்படும்.

இதன்மூலம் இளைய தலைமுறையினர் உள்ளிட்ட அனைத்து தரப்பினரும் காலவிரயமின்றி உடனடி வங்கிச் சேவை பெறுவது உறுதிச் செய்யப்படும்.

**14. கூட்டுறவுச் சங்க சேவைகளை பொதுமக்கள் எளிதில் அறிந்து கொள்ளவும், அலுவலர்கள் களப்பணிகள் மேற்கொள்ளவும் ஏதுவாக புதிய “கூட்டுறவு செயலி” (Cooperative App) உருவாக்கப்படும்.**

கூட்டுறவுச் சங்கங்கள் வழங்கும் சேவைகளை பொதுமக்கள் எளிதில் தெரிந்துகொள்ளவும், சேவைகளைப் பெறவும், நிர்வாகத்தினை செம்மைப்படுத்த அலுவலர்கள் களப்பணிகளை மேற்கொள்ளவும் “கூட்டுறவு செயலி” உருவாக்கப்படும்.

இதன்மூலம் பொதுமக்களுக்கு துரித சேவை வழங்கவும், களஆய்வு அறிக்கைகளை உடனுக்குடன் வழங்கவும் அதன் நிவர்த்தி அறிக்கைகளை உடன் பெறவும் வழிவகை செய்யப்படும்.

**15. ஏற்காட்டில் கூட்டுறவு மலையக வள மையம் (Cooperative Hill Area Resource Centre) அமைக்கப்படும்.**

மலைவாழ் மக்களின் பொருளாதாரத்தை மேம்படுத்திடவும், பழங்குடி இளைஞர்களுக்கு கல்வி, வேலை வாய்ப்புக்களை உருவாக்கவும், வேளாண் விளைபொருட்களை பதப்படுத்தி சந்தைப்படுத்தவும், விளைபொருள் வீணாகாமல் சேமிக்கவும் ஏதுவாக பெரும்பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்களின் இணையத்தால் ஏற்காட்டில் கூட்டுறவு மலையக வள மையம் அமைக்கப்படும்.

இம்மையம் மலைவாழ் மக்களின் திறன் மேம்பாட்டு மையமாகவும், உற்பத்தி பொருட்களை காட்சிப்படுத்தும் மையமாகவும் செயல்படும்.

**16. மலையகக் கூட்டுறவுச் சங்கங்கள்மூலம் (LAMPS) சில்லறை விற்பனை நிலையங்கள் (LAMPSCO) அமைக்கப்படும்.**

மலைவாழ் மக்களின் வாழ்வாதாரம் மற்றும் பொருளாதார முன்னேற்றத்தினை மேம்படுத்தும் நோக்கில் மலையக கூட்டுறவுச் சங்கங்கள்மூலம் 25 LAMPSCO விற்பனை நிலையங்கள் உருவாக்கப்படும். இதன் மூலம் மலைப்பிரதேசங்களில் சாகுபடி செய்யப்படும் விவசாய மற்றும் மலைப் பயிர்களுக்கான விரிவான சந்தை வசதி ஏற்படுத்தப்படும்.

இவ்விற்பனை நிலையங்களில் இணையவழி விற்பனை வசதியும் ஏற்படுத்தப்படும்.

**17. தமிழ்நாட்டின் அனைத்து மாநகராட்சிகளிலும் மற்றும் பெருநகரங்களிலும் கூட்டுறவு சில்லறை விற்பனை நிலையங்கள் தொடங்கப்படும்.**

தரமான நுகர்பொருட்களை நியாயமான விலையில் பொதுமக்களுக்கு வழங்கவும், கூட்டுறவு பொருட்களின் சந்தைப்படுத்துதலை ஊக்குவிக்கவும் தமிழ்நாட்டின் அனைத்து மாநகராட்சிகளிலும் மற்றும் பெருநகரங்களிலும் கூட்டுறவு சில்லறை விற்பனை நிலையங்கள் தொடங்கப்படும்.

இதன்மூலம் சந்தை விலை கண்காணிக்கப்பட்டு நுகர்வோர் நலன் பாதுகாக்கப்படும்.

**18. தமிழ்நாட்டில் அனைத்து வகை கூட்டுறவுச் சங்கங்களிடையே ஒருங்கிணைப்பு ஏற்படுத்தும் விதமாக கூட்டுறவு மேம்பாட்டு ஒருங்கிணைப்பு அமைப்பு உருவாக்கப்படும்.**

தமிழ்நாட்டில் கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் மற்றும் 14 செயற்பதிவாளர்களால் நிர்வகிக்கப்படும் கூட்டுறவுச் சங்கங்களுக்கு இடையே பொதுவான கலந்துரையாடல், கூட்டுறவு நோக்கங்களை நிறைவேற்றுதல், பல்வேறு புதிய முயற்சிகளை விவாதித்தல், வழிகாட்டுதல் மற்றும் ஊக்குவிப்பதற்கு தமிழ்நாடு கூட்டுறவு மேம்பாட்டு ஒருங்கிணைப்பு அமைப்பு உருவாக்கப்படும்.

இந்த அமைப்பு அனைத்து வகை கூட்டுறவுச் சங்கங்களுக்கும் இடையே ஒரு இணைப்பு பாலமாக அமையும்.

**19. அனைத்து கூட்டுறவுச் சங்க / வங்கிப் பணியாளர்களின் செயல்திறனை மேம்படுத்தி ஊக்குவிக்கும் வகையில் “விற்பனை / செயல்திறன் ஊக்குவிப்பு திட்டம்” அறிமுகப்படுத்தப்படும்.**

விற்பனை / வங்கி சேவையில் ஈடுபட்டுள்ள ஊழியர்களை ஊக்குவிக்கவும், நிர்ணயிக்கப்பட்ட வணிக இலக்குகளை அடையவும், விற்பனை / செயல்திறன் ஊக்குவிப்பு திட்டம் அறிமுகப்படுத்தப்படும். இத்திட்டத்தினால் அனைத்து கூட்டுறவு சில்லறை விற்பனை நிலையங்களிலும் விற்பனையில் ஈடுபடும் விற்பனையாளர்கள் சரியான எடையில் தரமான பொருட்களை இணக்க சேவையுடன் தொடர்ந்து வழங்கிட ஊக்கத் தொகை வழங்கப்படும்.

அதேபோல், வங்கிச் செயல்திறன் அடிப்படையில் அதன் பணியாளர்களுக்கு ஊக்கத் தொகை வழங்கப்படும்.

**20. கூட்டுறவு அமைப்புகளின் வசதிகளை மேற்கொள்ள ஏதுவாக “கூட்டுறவு உள்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம்” (Cooperative Infrastructure Development Scheme) செயல்படுத்தப்படும்.**

கூட்டுறவுச் சங்கங்களின் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தி செயல்திறனை அதிகரிக்கும் வகையில் கூட்டுறவு உள்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம் செயல்படுத்தப்படும்.

நலிவடைந்த சங்கங்களின் நிதி ஆதாரம் போதுமானதாக இல்லாத நிலையில் அச்சங்கங்களுக்கு புத்துயிரூட்டும் வகையில் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

இதன்மூலம் சங்கங்களின் உறுப்பினர்களுக்கான சேவை உறுதிப்படுத்தப்படும்.

**21. கூட்டுறவு அமைப்புகளில் நவீன தொழில் நுட்பங்களை அறிமுகப்படுத்த ஏதுவாக “கூட்டுறவு தொழில்நுட்ப மேம்பாட்டு திட்டம்” (Cooperative Technology Development Scheme) செயல்படுத்தப்படும்.**

சங்க உறுப்பினர்கள் மற்றும் வாடிக்கையாளர்களுக்கு மாறிவரும் தற்போதைய தொழில்நுட்ப சூழலுக்கு ஏற்றவாறு சிறந்த சேவைகளை வழங்குவதற்கான புதிய தொழில் நுட்பங்கள் இத்திட்டம்மூலம் அறிமுகப்படுத்தப்படும்.

இதன்மூலம் கூட்டுறவுச் சங்கங்கள் தங்கள் செயல்திறனை மேம்படுத்தி சந்தையில் நிலவும் போட்டிகளை எதிர்கொண்டு வளர்ச்சிப் பாதையில் செல்ல வழிவகுக்கும்.

**22. கூட்டுறவு அமைப்புகளின் செயல்பாடுகளில் புதிய முயற்சிகளை செயல்படுத்திட ஏதுவாக “கூட்டுறவில் புதிய முயற்சிகள் திட்டம்” (Cooperative Innovation Scheme) செயல்படுத்தப்படும்.**

கூட்டுறவுச் சங்கங்களின் செயல்பாடுகளை மேம்படுத்தி உறுப்பினர்கள் மற்றும் வாடிக்கையாளர்களுக்கு மேம்படுத்தப்பட்ட சேவைகளை வழங்க ஏதுவாக புதுமையான முயற்சிகளை ஊக்குவித்து சங்கங்களின் வருவாயைப் பெருக்க இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

இதன்மூலம் உறுப்பினர்கள், பணியாளர்கள் மற்றும் பொதுமக்கள் தங்களது புதுமையான ஆலோசனைகள் மற்றும் செயல் திட்டங்களை சங்கங்களின் வளர்ச்சிக்கு வழங்க வழிவகை செய்யப்படும்.

**23. நலிவடைந்த கூட்டுறவுச் சங்கங்களுக்கு புத்துயிரூட்ட “கூட்டுறவு இணைப்புச் சங்க ஆதரவுத் திட்டம்” (Member Support Programme) செயல்படுத்தப்படும்.**

நலிவடைந்த அல்லது வாழ்திறன் குறைந்த, நட்டத்தில் இயங்கும் கூட்டுறவுச்சங்கங்களை புத்துயிரூட்டும் நோக்கில் ‘கூட்டுறவு இணைப்புச் சங்க ஆதரவுத் திட்டம்‘ (MSP) செயல்படுத்தப்படும். மத்திய கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் தலைமைக் கூட்டுறவுச் சங்கங்களால் ஒவ்வொரு நிதியாண்டிலும் எதிர்பார்க்கப்படும் மொத்த இலாபத்தில் குறிப்பிட்ட தொகையினை இணைப்புச் சங்கங்களுக்கு வட்டி தள்ளுபடி (Interest Rebate), குறைந்த வட்டியில் மென்கடன் (Soft Loans), கூட்டு முயற்சிகள் (Joint Ventures) போன்ற வகையில், நலிவடைந்த அல்லது வாழ்திறன் குறைந்த இணைப்புச் சங்கங்களுக்கு உதவிகள் வழங்கி அவற்றின் செயல்திறன் மேம்படுத்தப்படும்.

**24. நவீன கூட்டுறவு தொழில்நுட்பங்களை இளைஞர்களிடையே கொண்டு செல்ல ஏதுவாக சென்னையில் “கூட்டுறவு தொழில்நுட்ப மையம்” உருவாக்கப்படும்.**

சென்னையில் பொதுமக்கள், கூட்டுறவு

- மாவட்ட அளவில் உள்ள சுய உதவிக்குழு உறுப்பினர்கள் நுகர்வோரின் உரிமைகள் மற்றும் பொறுப்புகள் குறித்து விழிப்புணர்வுப் பயிற்சிகள் அளிக்கப்படும்.
- பல்நோக்கு சேவைகள் வழங்குவதற்கு ஏதுவாகவும்
- சேவைகள் அனைத்து தரப்பினரையும் விரைவில் சேரும் வண்ணமும் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களுக்கு உட்கட்டமைப்பு நவீன மயமாக்கப்படும், தேவைக்கேற்ப புதிய அலுவலக கட்டடங்கள் கட்டப்படும்.
- நவீன வங்கியில் அனுபவத்தை கூட்டுறவு வங்கி வாடிக்கையா ளர்களுக்கு வழங்க 50 கூட்டுறவு வங்கிகள் மற்றும் அதன் கிளைகள் நவீனமயமாக்கப்படும்.
- கூட்டுறவு நிறுவனங்களில் பணிபுரியும் பணியாளர்கள் மற்றும் உறுப்பினர்களின் வாரிசுகளில் அரசுப் பள்ளிகளில் பயின்று 10-ஆம் வகுப்பு மற்றும் 12-ஆம் வகுப்பு பொதுத் தேர்வில் மாவட்ட அளவில் அதிக மதிப்பெண் பெறுபவர்களை ஊக்குவிக்கவும், பாராட்டவும் விருதுகள் வழங்கப்படும்.
- கூட்டுறவுச் சங்கங்கள், பணியாளர்கள், உறுப்பினர்களை ஊக்குவிக்கும் வகையில் மாநில அளவில் சிறந்த சங்கங்கள், சங்கப் பணியாளர்கள் மற்றும் சிறந்த உறுப்பினர்கள் ஆகிய பிரிவுகளில் விருதுகள் வழங்கப்படும்.

தொடர்ச்சி 13 ஆம் பக்கம்